பேரவை கூட்டத்தில் இன்று டி.ஆர்.பி.ராஜா பங்கேற்பார்

சென்னை, ஏப். 3: திமுக உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா, அவை நடவடிக்கைகளை செல்போன் மூலம் படம் எடுத்ததாக கடந்த ஜனவரி 31ம் தேதி சட்டப்பேரவை கூட்டம் நடைபெற்றபோது 10 நாள் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். அந்த கூட்டத் தொடரில் அவர் 5 நாள் பேரவைக்கு வரவில்லை.

இதையடுத்து கடந்த 26ம் தேதி துவங்கிய பட்ஜெட் கூட்டத்தொடரில் தொடர்ந்து 5 நாட்கள் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்க முடியாத நிலை இருந்தது. நேற்றுடன் 10 நாள் சஸ்பெண்ட் காலம் முடிவடைந்ததையொட்டி இன்று முதல் பேரவை கூட்டத்தில் திமுக உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்றார்.

அதேபோன்று கடந்த பிப்ரவரி 1ம் தேதி கவர்னர் உரை மீதான விவாதத்தில், விஜயகாந்தின் பேச்சு குறித்து அவை உரிமை மீறல் குழு விசாரணைக்கு பேரவைத் தலைவர் ஜெயக்குமார் அனுப்பி வைத்தார். இதையடுத்து விஜயகாந்த் 10 நாள் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

நாளையுடன் 10 நாள் சஸ்பெண்ட் முடிகிறது. இதையடுத்து நாளை மறுதினம் விஜயகாந்த் பங்கேற்பார்.

பன்றிக்காய்ச்சலுக்கு விவசாயி பலியானதை தொடர்ந்து திருப்பூர் மாவட்டம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தலைமை அரசு மருத்துவ மனையில் பன்றிக்காய்ச்சல் பாதித்தவர்களை அனுமதிப்பதற்கென சிறப்பு வார்டு அமைக்கப்பட்டுள்ளது.

7 போலீசார் குடும்பத்துக்கு தலா ₹2 லட்சம் நிதியுதவி

முதல்வர் உத்தரவு

சென்னை, ஏப்.3: விபத்து மற்றும் உடல் நலக்குறைவால் காலமான போலீசாரின் குடும்பத்தாருக்கு நிவாரண நிதி வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்த ராமதாஸ், கடந்த மார்ச் 28ம் தேதி மாரடைப்பால் உயிரிழந்தார். கடலூர் மாவட்டம், கருவேப்பிலங்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்த ஜெயராமன், மார்ச் 10ம் தேதி வாகன விபத்து ஏற்பட்டு, பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, உயிரிழந்தார்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு உட்கோட்டம், குமாரபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த கணேசன், மார்ச் 4ம் தேதி பணியில் இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

திருநெல்வேலி மாவட்டம், புளியங்குடி உட்கோட்டம், சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த கனஜேந்திரன், மார்ச் 2ம் தேதி வாகன விபத்து ஏற்பட்டு, பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, உயிரிழந்தார். மதுரை மாநகர் 'க்யூ' பிரிவு, புலனாய்வுத் துறையில், சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த தினகரன், மார்ச் 16ம் தேதி புற்று நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

திருச்சி மாவட்டம், சிறுகனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராகப் பணிபுரிந்த மணிமாறன், பிப்ரவரி 25ம் தேதி ரோந்து பணியின் போது விபத்து ஏற்பட்டு, உயிரிழந்தார்.

சென்னை, அம்பத்தூர் எஸ்டேட் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த சுப்பிரமணிய பிள்ளை, மார்ச் 14ம் தேதி உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்தார். இவர்களது மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சம்பந்தப்பட்ட குடும்பத்தாருக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

ஆசிரியர் பணியிடங்களுக்கு தகுதியுடையோர் பட்டியல்

டி.ஆர்.பி வெளியீடு

சென்னை, ஏப்.3: அரசு பள்ளிகளில் காலியாக இருந்த ஆசிரியர் பணியிடங்களில் பட்டதாரிகளை நியமிக்க கடந்த ஆண்டு கவுன்சலிங் நடத்தப்பட்டது. அதில் பதிவுமூப்பு அடிப்படையில் பட்டதாரிகள் அழைக்கப் பட்டனர். அதில் சிலரது பதிவு மூப்பு விடுபட்டது. இதையடுத்து விடுபட்ட நபர்களுக்கு இப்போது பணி நியமனம் வழங்குவது தொடர்பாக பட்டியல் பெறப்பட்டுள்ளது. ஆசிரியர் தேர்வுவாரியம் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

அரசு பள்ளிகளில் 314 பட்டதாரிகள் மற்றும் 48 சிறுபான்மை பட்டதாரி ஆசிரியர் நியமிக்கப்படுவது தொடர்பாக காலியிட அறிவிப்பு பெறப்பட்டது. இந்த இடங்களில் 15.3.2012 தேதி நிலவரப்படி மாநில அளவில் தகுதியுள்ள பதிவுமூப்பு பெற்றவர்கள் பெயர், பதிவு மூப்பு விவரங்கள் பாடவாரியாகவும் ஆசிரியர் தேர்வு வாரிய இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தகுதி உள்ளவர்கள் பெயர்கள் அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளதா என்று உறுதி செய்துகொள்ள வேண்டும்.

விடுபட்டவர்கள் தாங்கள் பதிவு செய்துள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தை 10.4.2012ம் தேதிக்குள் உரிய ஆதாரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ள வேண்டும். அதற்கு பிறகு தொடர்பு கொள்வோர் கோரிக்கை நிராகரிக்கப்படும்.

மின் கட்டண உயர்வு ரத்து கோரி

தி.மலையில் விஜயகாந்த் ஆர்ப்பாட்டம்

7ம் தேதி நடக்கிறது

சென்னை, ஏப்.3: தேமுதிக தலைமை நிலையம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாட்டில் ரூ.7,874 கோடி அளவிற்கு மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 1ம் தேதியில் இருந்து இந்த கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ளது. மின் கட்டண உயர்வால் மக்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

மின் கட்டண உயர்வை திரும்பப் பெறக்கோரி வரும் 7ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட தலைநகரங்களில் உள்ள மின்வாரிய அலுவலகங்கள் எதிரே தேமுதிக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் கட்சி தலைவர் விஜயகாந்த் தலைமையில் நடைபெறும். மேலும், இதர மாவட்டங்களில், கீழ்க்கண்டவர்கள் தலைமையிலும், மாவட்ட செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெறும்.

திருவண்ணாமலை – விஜயகாந்த். சென்னை – பண்ருட்டி எஸ். ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., எல்.கே. சுதீஷ். திருவள்ளூர் – அருண் சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் – டி.முருகேசன் எம்.எல்.ஏ., வேலூர் – பி.ஆர். மனோகர் எம்.எல்.ஏ., விழுப்புரம் – கோவை – பி.கே. தினகரன் எம்.எல்.ஏ., திருப்பூர் – எஸ். ஆஸ்டின், ஈரோடு – வி.சி. சந்திரகுமார் எம்.எல்.ஏ., நீலகிரி – ஜே.கா.ரவீந்திரன். கரூர் – டி.தமிழ் அழகன் எம்.எல்.ஏ., திருச்சி – எஸ். செந்தில்குமார் எம்.எல்.ஏ., பெரம்பலூர் – ஆர். சுபா எம்.எல்.ஏ., அரியலூர் – சாந்தி ராஜமாணிக்கம் எம்.எல்.ஏ., நாகப்பட்டிணம் – ஆர். அருட்செல்வம் எம்.எல்.ஏ., தஞ்சாவூர் – அருண் பாண்டியன் எம்.எல்.ஏ.,



திண்டுக்கல் – பி.வி.பி. முத்துகுமார் எம்.எல்.ஏ., தேனி – அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் எம்.எல்.ஏ.,

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்ட வனப்பகுதியில் 3 யானை சாவு

கூடலூர், ஏப்.3: நீலகிரி மாவட்டம் தொட்டமாயார் பகுதியில் கடந்த 2 நாட்களுக்கு முன் தண்ணீர் குடிக்க வந்த 25 வயது பெண் யானை சேற்றில் சிக்கியது. யானையை நேற்று முன்தினம் வனத்துறையினர் மீட்டு சிகிச்சை அளித்தனர். உடல்நிலை மிகவும் பலவீனமாக இருந்ததால் நேற்று காலை அந்த யானை உயிரிழந்தது. இந்நிலையில் முதுமலை புலிகள் காப்பகம் கார்குடி வனசரகம் அபயாரன்யம் வனப்பகுதியில் 4 வயது பெண் யானைக் குட்டி ஒன்று இறந்து கிடந்தது. இதே போல உதகை வனக்கோட்டம் சிங்கார வனச்சரகம் பொக்கப்புரம் வனப்பகுதியில் ஒன்றரை வயதுள்ள ஆண் குட்டி யானை ஒன்று இறந்து கிடந்தது. புலி தாக்கி இறந்தது தெரிந்தது.

உதயகுமார் பாஸ்போர்ட்டை 15 நாளில் ஒப்படைக்க கெடு

நெல்லை, ஏப்.3: கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக கடந்த 7 மாதங்களுக்கும் மேலாக போராட்டத்தை நடத்தி வருபவர் உதயகுமார். அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளராக உள்ளார். பிளச்டி படித்துள்ள உதயகுமார், ஆண்டுக்கு 6 மாதங்கள் அமெரிக்க பல்கலைக்கழகத்தில் கவுரவ பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

இவருக்கு சொந்தமாக நாகர்கோவிலில் பள்ளியும், சாக்கர் அறக்கட்டளையும் உள்ளது. உதயகுமாருக்கு நாகர்கோவில் பறக்கை சாலை சந்திப்பு என்ற முகவரியில் கடந்த 2010ம் ஆண்டு செப்டம்பர் 15ம் தேதி மதுரை மண்டல அலுவலகம் மூலம் பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மண்டல அலுவலகம் நோட்டீஸ்

உதயகுமார் மீது கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிரான போராட்டம் தொடர்பாக பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

எனவே அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வதை தடுக்க அவரது பாஸ்போர்ட்டை முடக்க மதுரை மண்டல பாஸ்போர்ட் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக கடந்த 30ம் தேதி, மதுரை மண்டல பாஸ்போர்ட் அலுவலர், உதயகுமாருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

அதில், மதுரை மண்டல பாஸ்போர்ட் அலுவலகம் மூலம் தங்களுக்கு கடந்த 2010ம் ஆண்டு செப்டம்பர் 15ம் தேதி பாஸ்போர்ட் வழங்கப்பட்டுள்ளது. தங்கள் மீது கூடங்குளம், பழவூர் போலீஸ் ஸ்டேஷன்களில் 98 கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே ஜே.3347811 என்ற எண் கொண்ட தங்களது பாஸ்போர்ட்டை 15 நாட்களுக்குள் ஒப்படைக்க வேண்டும்.

அத்துடன் நிலுவையில் உள்ள கிரிமினல் வழக்குகள் தொடர்பாகவும் விளக்கம் அளிக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் ஒப்படைக்கவில்லை எனில் மறு உத்தரவின்றி பாஸ்போர்ட் முடக்கப்படும், என்று கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து உதயகுமாரிடம் கேட்ட போது, " நோட்டீஸை சட்டரீதியாக சந்திப்பேன்" என்றார்.

குரூப் 1 தேர்வு முடிவு 15ம் தேதி வெளியீடு

சென்னை, ஏப்.3: 'கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற, குரூப் 1 தேர்வுக்கான முடிவுகள் வரும் 15ம் தேதி வெளியிடப்படும்' என்று டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) சார்பில் 'குரூப் 2' தேர்வு, கடந்த ஆண்டு ஜூலை 30ம் தேதி நடந்தது. இதில், நகராட்சி ஆணையர், இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர், உதவி பிரிவு அலுவலர் உள்ளிட்ட 37 பதவிகளில், 6,695 இடங்கள் இடம் பெற்றிருந்தன. அதில் 3,475 பணியிடங்கள் எழுத்து, நேர்முகத் தேர்வு மதிப்பெண் அடிப்படையிலும், மீதியுள்ள 3,220 பணியிடங்கள் எழுத்துத் தேர்வு மதிப்பெண் அடிப்படையிலும் நிரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த தேர்வை 6 லட்சத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எழுதினர். தேர்வு முடிந்து 8 மாதம் ஆகிறது.

இந்நிலையில், இத் தேர்வு முடிவு இம்மாதம் இறுதியில் வெளியிடப்படும் என்று டிஎன்பிஎஸ்சி தலைவர் நட்ராஜ் கூறியுள்ளார்.

மேலும், அவர் கூறுகையில்,' கடந்த ஜூன் 5ம் தேதி நடந்த 131 பதவிகளுக்கான குரூப் 1 தேர்வு நடைபெற்றது. இதன் முடிவு வரும் 15ம் தேதி அறிவிக்கப்படும். அதே போல, நடந்து முடிந்த விஏஓ தேர்வுக்கான மதிப்பெண் பட்டியல் இந்த வாரம் இணையதளத்தில் வெளியிடப்படும்' என்றார்.

விண்ணப்பதாரர் வசதிக்கு தாலுகாவுக்கு 2 உதவி மையம்

தேர்வுகளை ஆன்லைனில் விண்ணப்பிக்க புதிய வசதி

டிஎன்பிஎஸ்சி தலைவர் நட்ராஜ் தகவல்

சென்னை, ஏப். 3: 'டிஎன்பிஎஸ்சி தேர்வுகளை ஆன்லைனில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. ஆன்லைனில் பதிவு செய்ய தாலுகாவுக்கு 2 உதவி மையங்கள் அமைக்கப்படும் என்று அதன் தலைவர் நட்ராஜ் கூறினார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) தலைவர் நட்ராஜ் நேற்று அளித்த பேட்டி:

தமிழக அரசு பணிகளில் பணியாளர்களை நியமிப்பதில் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டு ஓராண்டுக்குரிய தேர்வு அட்டவணை அண்மையில் வெளியிடப்பட்டது. தற்போது, 12 அறிவிப்புகள் மூலம் 14 பதவிகளில் காலியாக உள்ள 152 காலிபணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் தேர்வுகள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் தங்களது விவரங்களை போட்டோ மற்றும் கையொப்பத்தினை தேர்வாணையத்தின் இணையதளத்தில் டவுன்லோடு செய்து பதிவு செய்யலாம். பதிவு கட்டணமாக ₹50 செலுத்தி இணையதளம் வசதியினை பயன்படுத்தி கொள்ளலாம். 5 ஆண்டுகளுக்கு பதிவு செல்லுப்படியாகும். தமிழகத்தில் உள்ள 500 தபால் நிலையங்கள், 800 இந்தியன் வங்கி கிளைகள், இன்டர்நெட் பேங்கிங், கிரடிட் மற்றும் டெபிட் கார்டு மூலம் பதிவு கட்டணத்தை செலுத்தலாம். பதிவு கட்டணம் செலுத்தினால் மட்டுமே பதிவு முறையானதாக கருதப்படும்.

அந்த பதிவு எந்த ஒரு பதவிக்கான விண்ணப்பமாக கருதப்படாது. தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனியாக இணையவழி விண்ணப்பத்தை பயன்படுத்தியும், வரையறுக்கப்பட்ட தேர்வு கட்டணத்தை செலுத்தியும் விண்ணப்பிக்க வேண்டும்.

விவரங்களை பதிவு செய்தவுடன் விண்ணப்பதாரர்களுக்கு பிரத்யேக குறியீடு, நுழைவு குறியீடு கொடுக்கப்படும். டிஎன்பிஎஸ்சியின் புதிய அறிவிப்புகள் இமெயில், எஸ்எம்எஸ் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். பதிவு செய்தவர்கள் கல்வி தகுதி போன்றவற்றை மட்டும் மாற்றம் செய்ய முடியும். இணையதளத்தில் பதிவு செய்தவர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்ப கட்டணம் செலுத்த தேவையில்லை. தேர்வு கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதும். ஹால்டிக்கெட்டையும் இணையதளத்தில் டவுன்லோடு செய்து கொள்ளலாம்.

இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் வசதிக்காக லேப்டாப், இணையதள வசதி, தடையில்லா மின்சாரம் வசதியுடன் கூடிய 500 உதவி மையங்கள் மாநிலம் முழுவதும் திறக்கப்படும். ஒவ்வொரு தாலுகாவிற்கு 2 மையங்கள் என்ற அடிப்படையில் உதவி மையங்கள் திறக்கப்படும். தேவைக்கேற்ப கூடுதல் உதவி மையங்கள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விண்ணப்பங்களை பதிவு செய்ய விண்ணப்பதாரர்கள் உதவி மையங்களை அணுகலாம். இந்த வசதிக்கு கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. இலவசமாகவே பயன்படுத்தி கொள்ளலாம். அது மட்டுமல்லாமல் தேர்வாணையம் இணையதளம் சீரமைக்கப்பட்டுள்ளது. இதில், தேர்வாணைய செயல்பாடு, விண்ணப்பதாரர் பகுதி, அரசு ஊழியர்கள் துறை சார்ந்த தேர்வு விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

விண்ணப்பதாரர்கள் பக்கத்தில் நிரந்தர பதிவு, அறிவிப்புகள், இணையதளம்வழி விண்ணப்பம், விதிமுறைகள், ஆண்டு திட்டம், பாடத்திட்டம், முந்தைய ஆண்டு கேள்வித்தாள்கள், விடைதொகுப்புகள், தகுதி மதிப்பெண்கள் உள்ளிட்டவைகள் இடம் பெற்றுள்ளன. விண்ணப்பதாரர்கள் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைதளம் வாயிலாகவும் தேர்வாணையத்துடன் இணைந்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நட்ராஜ் கூறினார். பேட்டியின்போது, டிஎன்பிஎஸ்சி செயலாளர் உதயசந்திரன் உடன் இருந்தார். டிஎன்பிஎஸ்சியின் www.tnpsc.gov.in, www.tnpsceams.net என்ற தேர்வாணையத்தின் இணையதளத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பதிவு செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக சீரமைக்கப்பட்ட டிஎன்பிஎஸ்சி இணைய தளத்தை, டிஎன்பிஎஸ்சி தலைவர் நட்ராஜ் நேற்று தொடங்கி வைத்தார்.

கொல்லிமலை சித்தர் பச்சிலை மூலிகை வைத்தியத்தில் தீராத வியாதிகளுக்கு தீர்வு

தவத்திரு கொல்லிமலை சித்தர் ஜோதிலிங்க அடிகள், தீராத வியாதிகளுக்கு பச்சிலை மூலிகை சித்த ஆயுர்வேத வைத்தியத்தில் சிகிச்சை அளித்து தீராத வியாதிகள் குணப்படுத்தப்படுகிறது. ஈரோடு மாவட்டம் பனையம்பள்ளியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் மூலிகை தோட்டம் அமைந்துள்ளது. தீராத நோய்களான ஆஸ்துமா, அலர்ஜி, சர்க்கரை வியாதி, பக்கவாதம், ரத்தப்புற்றுநோய், பெண்கள் கருப்பை புற்றுநோய், கிட்னி கோளாறுகள், யானைக்கால் நோய், இருதயநோய், மலட்டுத்தன்மை உள்ளவர்களுக்கு சிறந்த மூலிகை மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. 40 ஆண்டுகளாக பச்சிலை மூலிகை சித்த வைத்திய ஆராய்ச்சிகள் செய்து தீராத வியாதிகளான இளம்பிள்ளை வாதம், சொரியாஸிஸ், வெண்குஷ்டம், மூலம், நாட்பட்ட தலைவலி, பெண்களின் கர்ப்பபை சம்மந்தமான ரகசிய வியாதிகள், மூளை சம்மந்தமான நோய்களான சித்த பிரம்மை, மூளையில் கட்டி, மூளைக்கோளாறு,



மூளை வளர்ச்சி குறைவு, நடையின்மை, பேச்சின்மை, கை, கால் செயலிழந்து போதல், கண்பார்வைக்குறைவு, இருதய பலவீனம், மாரடைப்பு, எய்ட்ஸ், ஹெச்.ஐ.வி பாதித்தவர்களுக்கும், டி.பி, விஷக்காய்ச்சல், நரம்பு தளர்ச்சி, கை, கால் நடுக்கம் ஆகியவற்றிற்கும் பெண்களுக்கு கருப்பை வளர்ச்சியில்லாமை, கருப்பை சுருங்கி விடுதல் ஆகிய நோய்களிலிருந்து விடுதலை அடையவும் பச்சிலை மூலிகை வைத்தியத்தில் மருந்துகள் உள்ளன. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பால்வினை நோய்களுக்கும், கழுத்து, பிடரி, முதுகு வலி, அல்சர், வாயு கோளாறு, மூலம், காது கோளாறு, தோல் சம்மந்தப்பட்ட வியாதிகள் என அனைத்திற்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சர்க்கரை நோயால் கால்களில் ஆராத புண், கால்வெட்டி எடுக்கும் நிலையில் உள்ள வியாதிகளும் பூரண குணமாகின்றன. கொல்லிமலை சித்தர் ஜோதிலிங்க அடிகளார் 4.4.12 சிதம்பரத்தில் குமரபவன் ஹோட்டல் கீழரதவீதியில் காலை 7.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை, நெய்வேலியில் தெலுங்கு சமீதி ஜனதா தளம் அலுவலகம் எதிரில் மெயின் பஜாரில் மதியம் 2.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும், 5.4.12 பாண்டிச்சேரியில் நிர்மல் கெஸ்ட் ஹவுஸ் ,சின்ன சுப்பராய பிள்ளை தெரு, ராஜா தியேட்டர் அருகில் காலை 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை தங்கியிருந்து மருத்துவ ஆலோசனைகள் வழங்குகிறார். எங்களது நிர்வாக அலுவலகம் 281/141,திருவல்லிகேணி நெடுஞ்சாலை, சென்னை-5. மேலும் விவரங்களுக்கு: 94421-46727, என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ள தெரிவித்துள்ளார்.

Advt

இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

(கோவா மாநிலம் & யூனியன் பிரதேசங்களுக்காக)
2வது தளம், HSIIDC அலுவலக வளாகம், வனிஜ்யா நிகுஞ்ச் வளாகம், உத்யோக் விஹார், பேஸ்-V, குர்கான் – 122 016 (ஹரியானா)
போன்: 0124-2342851, 2342852, பேக்ஸ்: 0124-2342853
மின்னஞ்சல்: secretaryjerc@gmail.com இணையதளம்: www.jercuts.gov.in

பொது விசாரணை அறிவிப்பு

மின்துறை, புதுச்சேரி இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முன்பாக புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்காக முறையே 2011–12 & 2012–13 நிதியாண்டுக்காக மின்சார கொள்முதல் விலை சரிசெய்தல் (PPCA) உட்பட ARR & கட்டண கணக்கீட்டுக்காக 58/2011 மற்றும் 60/2011 என்ற மனுக்களை தாக்கல் செய்துள்ளது. (www.electricity.pondicherry.gov.in இணையதளத்தில் மனு கிடைக்கப்பெறும்)

புதுச்சேரி மின்துறை மூலம் 2011–12 & 2012–13 நிதியாண்டுக்காக தாக்கல் செய்யப்பட்ட மின்சார கொள்முதல் விலை சரிசெய்தல் (PPCA) உட்பட ARR & கட்டண மதிப்பீட்டு திட்ட வரைவின் மீது ஏனாம் மற்றும் மாஹேயில் ஆணையம் பொது விசாரணையை நடத்துகிறது.

நாள்	விசாரணை இடம்	நேரம் & பிரிவு
26.03.2012	நகராட்சி திருமண மண்டபம், விஷ்னாலயம் தெரு, ஏனாம்	காலை 11.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை PPCA சம்பந்தப்பட்ட விவகாரம் உட்பட அனைத்து நுகர்வோர்களுக்கு.
03.04.2012	கலையரங்கம், சிவில் ஸ்டேசன், மாஹே	காலை 11.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை PPCA சம்பந்தப்பட்ட விவகாரம் உட்பட அனைத்து நுகர்வோர்களுக்கு.

2012–13 நிதியாண்டுக்கான ARR & கட்டண மதிப்பீடு திட்டவரைவின் சிறப்பம்சம்

விவரங்கள்	அலகு	நிதியாண்டு 2009–10	மின்துறை மூலம் திட்டமிடப்பட்டது			2012–13 நிதியாண்டுக்கான மொத்த இடைவெளி
			நிதியாண்டு 2010–11	நிதியாண்டு 2011–12	நிதியாண்டு 2012–13	
வருவாய் இடைவெளி	₹ கோடி	72.82 (68.2)**	104.5	270.1*	367.4*	752.6
வழங்குதலின் தோராய மதிப்பு	ஒரு யூனிட்டுக்கு ₹	2.90	------	4.17	4.32	

குறிப்பு: ₹810.2 கோடி மொத்த இடைவெளியை உருவாக்கி புதுச்சேரி மின்துறை மூலம் ₹57.8 கோடி கூடுதல் இடைவெளியை கோரியுள்ளது.
*நடப்பாண்டுக்கு மட்டும்.
**2009–10 நிதியாண்டுக்காக புதுச்சேரி மின்துறையால் கோரப்பட்ட கூடுதல் இடைவெளி ₹68.2 கோடி ஆகும்.
மாண்புமிகு APTEL Order Op-1 of 2011–ன் படி 3 ஆண்டுகளுக்கு மேல் அதாவது நிதியாண்டு 2011–12, 2012–13 மற்றும் பின்வரும் ஆண்டில் ₹810.2 கோடி இந்த நிலுவையை பெறுவதற்கான கருத்துக்கள்.

ஒம்/–
(R.K. மாலிக்)
செயலாளர்